**காலி மா நகர சபை**
**காலி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 நவம்பர் 10 ஆந் திகதி சபையின் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, காலி மா நகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) 2002 ஆண்டின் போது மாநகர சபை அதிகார பிரதேசத்தில் மழை நீர் இறங்கி செல்வதற்காக வடிகால் முறைமையொன்று செய்வதற்கக செலவிடப்பட்ட ரூபா 50,945,716 தொகை மற்றும் சபையின் பயன்பாட்டிற்காக வழங்கியிருந்த ரூபா 2,198,083 தொகைக்கான சாக்கடை பவுஸரின் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்காமையால் சொத்துக்களின் பெறுமதி குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கூட்டுத் தொகை ரூபா 46,741,204 தொகையான வட்டியினை கணக்கீடு செய்திருக்காமையால் செலவுகள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்கான நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,222,277 தொகையினை கணக்கீடு செய்திருக்காமையால், ஆண்டிற்கான வருமானம் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) இரத்து செய்யப்பட்டிருந்த 11 நிர்மாண வேலைகளுக்காக கூட்டுத்தொகை ரூபா 6,036,123 தொகை கடன்கொடுத்தோரின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்தமையால் நடைமுறைப் பொறுப்புக்கள் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31திகதியில் உள்ளவாறு ஒய்வூதிய நிதித்திற்கு பங்களிப்பு தொகையாக செலுத்த வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 99,734,709 தொகை நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருக்காமையால் நடைமுறைப் பொறுப்புக்கள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

**1.3.2 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

கூட்டுத்தொகை ரூபா 9,510,482 தொகைக்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அங்கிகாரம் பெற்றுக் கொள்ளாமல் மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் கணக்கின் மூலம் சீராக்கல் மேற்கொள்ளபட்டிருந்தது.

**1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக் கூற்றுகளில் உள்ளடங்கியுள்ள கூட்டுத்தொகை ரூபா 168,978,725 தொகைக்கான 07 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய துனைப் பதிவேடுகள் / அட்டவணைகளின் பிரகாரம் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 38,080,702 இற்கான சமமின்மைகள் அவதானிக்கப்பட்டது.

**1.3.4 தொங்கல் கணக்கு**

2003 ஆண்டு முதல் மாற்றம் இன்றி முன் கொண்டு வரப்பட்டு காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 111,553 தொகைக்கான தொங்கல் கணக்கின் வரவு மீதியை இனங்கண்டு தேவையான சீராக்கல் மேற்கொள்ளப்பட்டு தீர்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் போது ரூபா 232,143,510 தொகையாக காணப்பட்ட வருமானக் கடன்பட்டோர் மீதி மீளாய்வாண்டு இறுதி அளவில் ரூபா 377,974,063 தொகை வரை அதிகரித்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் போது ரூபா 269,735,791 தொகையாக காணப்பட்ட கடன் கொடுத்தோர் மீதி மீளாய்வாண்டின் போது ரூபா 317,819,678 தொகை வரை அதிகரித்திருந்ததுடன், அம் மீதியை பகுப்பாய்வு செய்யாமல் நிதிக் கூற்றுகளில் காட்டப்ட்டிருந்தது.

**1.3.6 கணக்காய்விற்கு சான்றுகள் இன்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 212,706,605 தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக இற்றை வரைபடுத்தப்பட்டுள்ள சொத்துக்களின் வகுப்புக்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் பதிவேடும், ரூபா 377,974,063 இற்கான கடன்பட்டோர்கள் மற்றும் ரூபா 317,819,678 இற்கான கடன் கொடுத்தோர் தொடர்பாக முறைப்படி பேணப்பட்டிருந்த கடன் கொடுத்தோர் மற்றும் கடன் பட்டோர் பதிவேடுகள் மற்றும் காலப்பகுப்பாய்வுகள் சமர்பிக்கபட்டிருக்காமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) கூட்டுத்தொகை ரூபா 85,845,997 தொகை பெறுமதியான 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீதிகள் 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் தீர்க்கப்படாமல் நிதிக்கூற்றுகளில் முன்கொண்டு வந்து காணப்பட்டது. அது தொடர்பாக தகவல்கள் ஏதும் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுகளின் பிரகாரம் கையிருப்பு மீதி இருப்புப் பதிவேட்டின் பிரகாரம் சமர்பித்திருந்த இருப்பு மீதிகளிடையே ரூபா 69,291,675 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்ட போதிலும் இது தொடர்பாக தகவல்கள் ஏதும் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

### 1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1947 இன் 16 இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் | |
| (i) 252 ஆம் பிரிவு | வீதவரி செலுத்துவதை புறக்கணித்த நபர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) 103(1) ஆம் பிரிவு | சபையின் எழுத்துமூலமான இணக்கத்தை ஆரம்பத்தில் பெற்றுக் கொள்ளாத சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட நிர்மாண வேலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| நிதிப்பிரமாணம் 570 | இரண்டு ஆண்டு காலத்தை மிகைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 4,832,310 இற்கான பொது வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய CSS/7/1/1/1 இலக்கம் கொண்ட பிரதான செயலாளர்(நிதி) சுற்றறிக்கை | நிதி மற்றும் கலஞ்சியத்திற்கு பொறுப்பாக கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் எவரிடமும் பிணைகள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்பிக்கபட்டிருந்த நிதிக் கூற்றுகளின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டு வரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 128,351,803 தொகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 43,967,186 தொகையாக காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 84,384,617 இற்கான வளர்ச்சி ஒன்றினை காட்டியது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வீதவரி

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 741,930 தொகை செலவிடப்பட்டு, புதிய கணினி மென்பொருள் ஒன்று நிறுவப்பட்டிருந்தமையால் மற்றும் வீதவரி பதிவேடு நாளதுவரை ஆக்கப்படாதிருந்தமையால் வருடத்தின் ஆரம்ப மீதி தொடர்பாக பகுப்பாய்வு ஒன்றினை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு சபைக்கு இயலாதிருந்தது.

(ஆ) 2015 மற்றும் 2016 ஆண்டுகள் தொடர்பாக நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்காக மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 252(1)(அ) ஆம் பிரிவு இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. நிலுவை வீதவரி அறவீடு செய்வதற்காக 08 வருமான சேகரிக்கும் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 363,454 இற்கான கமிஷன் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், ரூபா 66,114,672 தொகையான நிலுவை வீதவரியில் ரூபா 1,871,399 இற்கான தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) புதிய வீதவரி இலக்கங்கள் பெற்றுக் கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த 63 கோவைகளில் 60 கோவைகளை வருமான பரிசோதனைக்கு வழங்கியிருந்த போதிலும், பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்திற்கு 33 கோவைகள் மாத்திரமே அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 50,000 இனை மிகைத்துள்ள 177 வீதவரி அலகுகளில் இருந்து ரூபா 35,449,728 இற்கான நிலுவை வீதவரி மீதியொன்று அவதானிக்கப்பட்டதுடன், அவற்றை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.2 வாடகை

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 87,019,453 இற்கான வாடகைத் தொகையில் ஆண்டின் போது ரூபா 53,965,613 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன், அவை பெற வேண்டிய மொத்தத் தொகையில் 62 சதவீத பெறுமதி ஒன்றினை கொண்டிருந்தது.

(ஆ) 2010 ஆண்டிற்கு முன்னர் இருந்து காலி பழைய பஸ்தரிப்பு நிலையத்தில் அமைந்துள்ள கட்டிடங்களை வாடகை கொடுத்ததன் மூலம் ரூபா 1,034,869 தொகை மற்றும் வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையில் இருந்து மற்றும் ருஹுணு பஸ் கம்பனியில் இருந்து அறவிட்பட வேண்டிய ரூபா 1,755,589 இற்கான தொகை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 அனுமதிப் பத்திர கட்டணம்

(அ) சபையின் அதிகார பிரதேசத்தில் வர்த்தக நடவடிக்கை மேற்கொள்வதற்கு வியாபார அனுமதிப் பத்திரம் ஒன்று பெற்றுக் கொள்ள வேண்டுமெனினும், நிதிக்கூற்றுகளின் பிரகாரம் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 6,047,154 இற்கான நிலுவை அனுமதிப்பத்திர கட்டண மீதியொன்று அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், சட்டரீதியற்ற முறையில் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்த போதிலும், இது தொடர்பாக நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) அனுமதிப்பத்திரக் கட்டணம் சிட்டையிடும் போது ஆண்டிற்கான வழக்கு தாக்கல் செய்தல் கட்டணம் ஆகிய ரூபா 590,400 இற்கன தொகையினை கழித்து தேறிய சிட்டையிடல் தொகையை மாத்திரம் அனுமதிப்பத்திர கட்டண வருமானம் என இனங்காணபட்டிருந்தது.

**2.3.4 எழுத்தாணைக் கட்டணம் மற்றும் ஏனைய வருமானங்கள்**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 64,078,620 தொகையாக இருந்த எழுத்தாணைக் கட்டணம் மற்றும் ஏனைய வருமானங்கள் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 200,396,371 தொகை வரை அதிகரித்திருந்ததுடன், அது வருட அரம்பத்தில் காணப்பட்ட மீதியை விட 313 சதவீத உயர்ந்த சதவீதத்தை கொண்டிருந்தது. அதேபோல் அங்கீகாரம் இன்றி வருடத்தின் ஆரம்ப நிலுவை மீதியில் ரூபா 9,510,482 இற்கான தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

**(அ) ஆயுர்வேதப் பிரிவு**

(i) ஆயுர்வேதப் பிரிவின் மதிப்பீட்டு ஏற்பாடுகள் மற்றும் வழங்கியிருந்த ஏற்பாடுகளை கடந்த இரண்டு ஆண்டுகளின் போது குறைக்கப்பட்டிருந்தது. எனினும் கடந்த பல வருட காலங்களின் போது ஆயுர்வேத பகுதியில் பரிகாரம் பெற்றுக்கொள்வதற்கு வந்திருந்த நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ii) மீளாய்வாண்டின் போது ஆயுர்வேதப் பகுதி மருந்து வகைகள் கொள்வனவிற்காக ஏற்பாடுகள் ஏதும் வழங்கியிருக்கவில்லை.

(iii) 2016 ஆண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் ஆயுர்வேத பகுதியில் பதவியணியினர் 06 பேர்கள் எனக் குறிப்பிட்டிருந்த போதிலும், உள்ளவாறான பதவியணியினர் 03 ஆக காணப்பட்டமையால் நாளாந்த கடமைகளை நிறைவேற்றுவதில் வசதியீனங்கள் ஏற்பட்டிருந்தன.

(iv) உள்ளக ஊழியர்களின் சிக்கல் ஒன்றின் காரணமாக பெண் ஆயுர்வேத மருத்துவர் 2015 பெப்ரவரி 26 திகதி முதல் நாள் வரவு பதிவேட்டில் உள்வருதல் மற்றும் வெளிச் செல்லல்கள் கையொப்பமிட்டிருக்கவில்லை.

**(ஆ) உறுதிகளின் பொழிப்புக்கள் வழங்கல்**

சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த பிரஜைகள் நியதிச்சட்டத்தின் பிரகாரம் வீதவரி திருத்தங்கள் மற்றும் புதிதாக வீதவரி இலக்கங்கள் வழங்கல் தொடர்பான உறுதிகளின் பொழிப்புகள் 03 நாட்களுக்குள் வழங்கப்படுவதாக அறிவித்திருந்த போதிலும், 2017 ஜூன் 07 திகதி வரை வேலைகள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களின் எண்ணிக்கை 724 ஆக இருந்தது.

### 3.2 விளைவற்ற / குறைவாக பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

மாநகர சபையின் பயன்பாட்டிற்காக 2015 ஆகஸ்ட் 30 திகதி கொள்வனவு செய்திருந்த ரூபா 59,900 தொகை பெறுமதியான வாயு சீராக்கல் பொறி ஒன்று 2017 ஜூலை 17 திகதி வரை விளைவற்று களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

## 3.3 முகாமைத்துவ திறமையின்மைகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 19 ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 755,326 இற்கான பதவியணிக் கடன் தொகை அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையினால் மிகையாகச் சேர்க்கப்பட்டிருந்த 78 ஊழியர்களின் நியமனங்களை முறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 114 ஊழியர் வெற்றிடங்களுக்காக முறைப்படி ஆள் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபை நிதியத்திலிருந்து 2016 ஆண்டின் போது மேற்கெள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 196 அபிவிருத்தி செயற்திட்டங்களில் 11 செயற்திட்டங்கள் இரத்து செய்யப்பட்டிருந்ததுடன், செயற்படுத்தியிருந்த 33 செயற்திட்டங்களை 2017 ஜுலை 07 திகதி வரை பூர்த்தி செய்திருக்கவில்லை.

(ஈ) வாகன நிருவாகம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையின் பயன்பாட்டிற்காக அரச நிறுவனங்களிலிருந்து வழங்கியிருந்த 06 வாகனங்களின் உரிமையினை சபையின் பேரில் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 130 வாகனங்கள் தொடர்பாக மாதாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பித்திருக்கவில்லை.

(iii) சாரதிகளை சேர்த்துக் கொள்ளும் போது பிணைகள் பெற்றிருக்கவில்லை. 2016 திசெம்பர் 04 திகதி LL – 6447 இலக்க போடோன் வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக ரூபா 388,616 இற்கான நட்டத்தை பொறுப்பு சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) சபைக்குச் சொந்தமான வியாபார வளவுகளை வாடகைக்கு கொடுத்தல் மற்றும் வருமானம் சேகரித்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபைக்கு சொந்தமான வியாபார வளவுகளை வாடகைக்கு கொடுக்கும் போது நடப்பு காலத்திற்கு ஏற்றவாறு வாடகையை திருத்தாமல் மற்றும் வாடகை உடன்படிக்கைகளை புதுப்படுத்தல் மேற்கொள்ளாமல் தொடர்ந்து ஒரே வாடகையாளர்களுக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

(ii) டல்பட் டவுனில் முதலாம் ஒழுங்கை 25 கடைகளில் காணி துண்டுகளில் 14 கடை உரிமையாளர்கள் 2006 ஆண்டு முதல் தொடர்ச்சியாக கடை வாடகை செலுத்தாமல் இருந்ததுடன் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,989,642 இற்கான நிலுவைத் தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) குறிப்பிட்ட வருமான பதிவேட்டின் பிரகாரம் சபையின் அதிகார பிரதேசத்தில் 234 மரக்கறி வர்த்தக நிலையங்கள் காணப்பட்ட போதிலும் அவற்றில் 58 வர்த்தக நிலையங்களுக்காக 2016 ஆண்டிற்காக சிட்டையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) ஒரொப்புவத்த சுனாமி கடைகள் 93 இல் 2016 திசெம்பர் 31 திகதி வரை நிலுவை வரிப் பெறுமதி ரூபா 405,129 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதேபோல், குறிப்பிட்ட வாடகையாளருடன் உடன்படிக்கைகள் மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காலி மாநகர சபைக்குச் சொந்தமான பிரதான வீதியில் 80 ஆம் இலக்க கட்டிடம் நவம்பர் 10 ஆம் திகதி வேறு ஒரு தரப்பினருக்கு சாட்டுதல் செய்த போது சாட்டுதல் கட்டணம் ரூபா 8,880,000 தொகையில் ரூபா 7,771,000 இனை புதிய வாடகையாளர் நகர சபைக்கு செலுத்தி மீதித் தொகையாகிய ரூபா 1,109,000 தொகையினால் குறிப்பிட்ட கட்டிடத்தை பழுதுபார்த்தல் வேலைகள் மேற்கொள்வதற்காக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதே போல வாடகையாளருக்கு அனுகூலமான முறையில் உடன்படிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நகரசபையினால் பல்வேறு சேவைகளுக்காக அறவிடப்படும் சேவைக்கட்டணத்திற்கு மேலதிகமாக வேறு கட்டணம் என ரூபா 428,512 தொகை அறவிடப்பட்டு, நகர சபை கட்டளைச் சட்டத்திற்கு இணங்காத விதமாக அத் தொகையில் ரூபா 398,373 இற்கான தொகையொன்று குறிப்பிட்ட சேவையினை நிறைவேற்றிய உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

## 3.5 திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபையின் அதிகார பிரதேசத்தில் நாளாந்தம் சேகரமாகும் சுமார் 45-50 தொன்கள் குப்பைகளை வகைப்படுத்தி எடுக்கப்படுவதுடன் அவற்றில் 60 சதவீத உக்கக்கூடிய குப்பைகளை உடன்படிக்கையின் பிரகாரம் மொன்ரோச்சிய தோட்டத்தில் போடப்பட்டு இருந்தது. மீதியான உக்காத குப்பையில் அடங்கும் கண்ணாடிகளை விற்பனை செய்யப்படுவதுடன் மீதியான உக்காத பொருட்களை ஹீன்பன்தல சபையின் வளவில் குவிக்கப்படுவதனால் தற்போதும் பாரிய அளவிலாக குப்பைகள் சேகரமாகியுள்ளன. உக்காத குப்பைகளின் முகாமைத்துவத்திற்காக நீண்ட காலத் திட்டமொன்று சபையில் காணப்படவில்லை. அதேபோல உக்காத குப்பைகளை குவிகப்பட்டுள்ள சபை வளவுக்கு அண்மையிலுள்ள கால்வாய் பாதையும் அடைக்கபட்டு அப்பகுதியுள்ள பொது மக்களின் அன்றாட வாழ்க்கை ஆபத்து ஒன்று ஏற்படக் கூடிய நிலைமை காணப்பட்டது.

## 3.6 சுற்றாடல்சார் சிக்கல்கள்

நகர சபையினால் நீர் வழிந்து ஓடுவதற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த பொது வடிகால் முறைமை சபையின் அங்கீகாரம் இன்றி உடைத்து தனியார் வீடுகளின் வடிகால் நீர் ஓடிச் செல்வதற்கு ஏற்றவாறு ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததுடன் சில வீடுகளில் கழிவு நீர் நேரடியாக பொது வடிகால் முறைமைக்கு திருப்பபட்டிருந்தது. அதேபோல பொது வடிகால்கள் மீது சில நிர்மாண வேலைகள் மேற்கொள்ளபட்டிருந்ததுடன், அது தொடர்பாக நடவடிக்கை ஏதும் மாநகர சபையினால் எடுத்திருக்கவில்லை.

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) வெளி தரப்பினருக்கு வழங்கியிருந்த சொத்துக்கள்

(i) மாநகர சபையின் அங்கத்தவர்களுக்கு ரூபா 1,460,300 தொகை பெறுமதியான 17 மடிக் கணினிகள் கொள்வனவு செய்து விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், சபையினை கலைத்த போது 12 அங்கத்தவர்கள் அம்மடிக் கணணிகளை திருப்பி ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதேபோல, ஒரு அங்கத்தவரின் மடி கணணி தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த திருப்பி ஒப்படைக்கப்படாத கணினிகள் மற்றும்

களவாடப்பட்ட கணினிகள் தெடர்பாக நடவடிக்கை ஏதும் மாநகர சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சபை அங்கத்தவர்களுக்கு பயன்படுத்துவதற்காக கூட்டுத்தொகை ரூபா 791,982 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டு 18 டெப்கள் மற்றும் ரூபா 90,000 தொகை செலவிடப்பட்டு 20 பவர் பாங்க்கள் மற்றும் 17 டெப் உரைகளும் கொள்வனவு செய்து அங்கத்தவர்களுக்கு வழஙகப்பட்டிருந்தது. சபைக கலைத்த பின்னர் 11 சபை அங்கத்தவர்கள் குறிப்பிட்ட உபகரணங்களை திருப்பி ஒப்படைத்திருக்கவில்லை.

(ஆ) உரித்தாக்கப்படாத சொத்துக்களை முறைசாராத விதமாக பயன்படுத்துதல்

---

(i) நகரசபைக்கு சொந்தமாக 05 அரசாங்க வீடுகள் தொடர்பாக தாபனக் கோவையின் xix ஆம் அத்தியாயம் 6.15 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) சபைக்குச் செந்தமான 24 அரசாங்க வீடுகள் காணப்பட்ட போதிலும், குறிப்பிட்ட அரசாங்க வீடுகள் பதிவேட்டில் 21 வீடுகள் மாத்திரம் உட்படுத்தப்பட்டிருந்ததுடன், 12 வீடுகள் தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டன. அவற்றை பழுதுபார்த்து பயன்படுத்துவதற்குப் பொருத்தமான நிலைக்கு கொண்டுவருவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடங்கிய 08 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 158,258,904 தொகைக்கான சேமிப்பும், ஒரு செலவு விடயத்தில் ரூபா 6,506,945 இற்கான பிரதிகூலமான முரண்களும், 05 வருமான விடயங்களில் ரூபா 94,270,676 இற்கான நெருங்கியிருக்காத இலக்கு வருமானமும் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுபாட்டு கருவியொன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளக கணக்காய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 134(2) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கத்தினை பெற்றிருக்காததுடன், நிதிப் பிரமாணங்கள் 134(3) இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கபட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் நிறுவப்பட்டிருந்த உள்ளக கணக்காய்வு அலகிற்கு 04 முகாமைத்துவ உதவியாளர்களும் சேவை உத்தியோகத்தர்களும் மற்றும் அலுவலக உதவியாளர் ஒருவரும் இணைக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது 09 கணக்காய்வு அவதானிப்புகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுச் செயற்படுத்துதல்

2009 ஜூன் 09 ஆந் திகதி DMA/2009 (i) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்காக மீளாய்வாண்டு இறுதிவரை சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| முறைமைகள் | முறைமையில் முக்கிய குறைபாடுகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் | (i) சொத்துக்கள் வகுப்பு அடிப்படையில் வெவ்வேறான விபரங்கள் காட்டக்கூடிய விதமாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) சில இயந்திரங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் விநியோகிக்கப்படாமல் செயற்படாத நிலையில் களஞ்சியத்தில் காணப்பட்டது. |
| | (iii) சொத்துக்களை ஏலவிற்பனை செய்த பின்னர் அவற்றின் கிரயத்தை இனங்கண்டு சொத்துக்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) வாகன நிருவாகம் | (i) சபைக்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (ii) சபைக்குச் சொந்தமான வாகனங்கள் எவற்றினதும் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்பித்திருக்கவில்லை. |
| | (iii) சபையினால் பயன்படுத்தப்படும் வாகனங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) கணக்கீடும் பதிவேடுகள் பேணலும் | (i) பல வருட காலமாக காணப்படும் தொங்கல் கணக்கின் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (ii) நீண்ட காலமாக முன்கொண்டுவரப்படும் கணக்கு மீதிகள் தொடர்பாக கவனம் செலுத்தி, உரிய சீராக்கல்கள் மேற்கொண்டு கணக்குகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (iii) வீதவரி மென்பொருள் அல்லது பதிவேடு மூலம் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. |

| | | |
|---|---|---|
| | | (iv) நிதிக்கூற்றுக்கள் மற்றும் பதிவேடுகள் இடையே காணப்படும் மீதிகளின் வித்தியாசங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | வருமானம் சேகரித்தல் | (i) நிலுவை வருமானத்தை அறவீடு செய்தவதற்கு முறையான செயற்திட்டமொன்று தயாரித்து செயற்படுத்தியிருக்கவில்லை.<br>(ii) முத்திரைக் கட்டண வருமானத்திற்காக ஏற்பாடுகள் கடந்த ஆண்டுகளின் வருமானங்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br>(iii) முத்திரைக் கட்டணம், நீதிமன்றத் தண்டப்பணம் போன்ற வருமானங்களை இற்றைவரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>(iv) புதிய வீதவரி இலக்கம் வழங்கும் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை குறைந்த பெறுமதியை பெற்றிருந்தது.<br>(v) சபைக்குச் சொந்தமான சில பொது சந்தைகளின் ஆண்டிற்கான சிட்டையிடல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பணிப்பாளர் குழு முகாமைத்துவம் | (i) அங்கீகரிப்பட்ட பதவியணி திட்டத்தில் நிரந்தர பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது மிகைப்பதவியணியினை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>(ii) அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஊ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு தொடர்பாக தொடர்செயல் நடவடிக்கை மேற்கொண்டு திருத்தங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (எ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) நிர்மாண வேலைக் கடன் கொடுத்தோர்கள் என ஒதுக்கீடு செய்த பின்னர் இரத்துச் செய்யப்பட்ட செயற்திட்டங்களின் பெறுமதி கணக்குகளில் இருந்து அகற்றியிருக்கவில்லை.<br>(ii) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகள் தொடர்பாக முறைசார் விதமாக கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் பதிவேடு மற்றும் காலப்பகுப்பாய்வு தயாரித்திருக்கவில்லை.<br>(iii) நீண்ட காலமாக காணப்படும் கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |